முகக்கவசம் அணியாத

# 27 பயணிகளிடமிருந்து ரூ.5400 அபராதம் வசூல்!

## மெட்ரோ ரெயில் நிர்வாகம் நடவடிக்கை!!

சென்னை, ஜூன்.30–

முகக்கவசம் அணியாதவர்கள், முகக்கவசத்தை சரியாக அணியாத 27 பயணிகளிடமிருந்து ரூ.5400 அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளதாக சென்னை மெட்ரோரெயில்நிர்வாகம் அறிவித்துள்ளது.

இது குறித்து அந்த நிறுவனம்சார்பில்வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

அனைத்து மெட்ரோ ரெயில் நிலையங்களிலும் செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை தொடர்பான வழிகாட்டுதல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பயணிகளின் விழிப்புணர்வுக்காகதனிமனித இடைவெளி, முகக்கவசம் அணிவது மற்றும் பாதுகாப்பான பயணம் குறித்து பதிவு செய்யப்பட்ட அறிவிப்புகள் மெட்ரோரெயில்நிலையங்கள் மற்றும் மெட்ரோ ரெயில்களில் அவ்வப்போதுவெளியிடப்படுகின்றன.

அனைத்துபயணிகளும் முகக்கவசத்தை சரியாக அணிந்துள்ளனரா என்பதை கண்காணிக்க குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளது. மெட்ரோரெயில்நிலையங்கள் மற்றும் மெட்ரோ ரெயில்களில்நுழைவதற்கு அனைத்து பயணிகளும் கட்டாயம் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். பயணிகள் முகக்கவசம் அணியாவிட்டாலோ அல்லது முகக்கவசத்தை சரியாக அணியவில்லை என்றாலோ உடனடி அபராதமாக ரூ.200 வசூலிக்கப்படுகிறது. 21–ந் தேதி முதல் 29–ந் தேதி வரை முகக்கவசத்தை அணியாமல் அல்லது சரியாக அணியாமல் பயணம் செய்ததற்காக 27 பயணிகளிடமிருந்து அபராதமாக ரூ.5400 வசூலிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.